மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, நவீன விஞ்ஞான அறிவியல் அடிப்படையில் ஒரு புதிய பொறியியல் கல்லூரியை தர்மபுரிக்குத் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கின்றார்கள். அரசு அதை ஆய்ந்து வருகிறது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் கல்வியில் மிகவும் பின்னணியில் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய கூடலூர் தொகுதியில் உள்ள மாணவர்கள் ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் தொலைவு வந்து ஊட்டியில் உள்ள கலைக் கல்லூரியில் படிக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே கூடலூருக்கு என்று ஒரு கலைக் கல்லூரியையோ அல்லது அரசு பாலிடெக்னிக்கையோ துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கொள்கை ரீதியாக கலைக் கல்லூரிகளைத் துவக்க அரசு இனி அனுமதி தராது. ஆனால் பாலிடெக்னிக்கைப் பொறுத்த வரையில் அரசு தேவையின் அடிப்படையிலே பரிசீலனை செய்யும்.

## தாய்மார்கள் நலன் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்கள்.

397—(*வினா எண். 1197() திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள தாய்மார்களின் நல்னைப் பேணவும், குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும், மத்திய அரசின் திட்டங்கள் எவையேனும், மாநில அரசால் செயல்படுத்தப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அவைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சமுதாயத்தில் நலிவுற்ற வகுப்பினைச் சார்ந்த குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் செறிவுமிகுந்த பணிகள் ஒருங்கிணைந்த வடிவில் வழங்குகின்ற அளவில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த

1987 ஏப்ரல் 11]

குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் பின்வருமாறு அமையும்:

1. துணை ஊட்டச்சத்து.

2. முன் பருவக் கல்வி.

3. மருத்துவ சோதனை.

4. நோய் தடுப்பு.

5. மேல் மருத்துவ சோதனை.

6. சமுதாயத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் உள்ள தாய்மார்களுக்கு நடத்துகின்ற எஸ். என். சி. செண்டர் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அது உண்மையா? மறுபடியும் தொடர்வதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிவதோடு இந்தத் திட்டத்தின்கீழ் எத்தனை மையங்கள் உள்ளன? 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எத்தனை பேர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து நம்முடைய தமிழகத்தின் முதல்வருடைய ஆசியோடு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தமிழகத்தினுடைய நகராப் பகுதிகளில் 37 திட்டப் பிரிவுகளும், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 15 திட்டப் பிரிவுகளும், ஆக மொத்தம் 52 திட்டப் பிரிவுகள் செயல்படுகின்றன. இதிலே குழந்தைகள் 70,785 பேர்கள் பயன் பெறுகிறார்கள்.